மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பாடத் திட்டங்கள் 1965 ஆம் ஆண்டிலே மாற்றப்பட்டதுதான். அதன் பிறகு ஓரளவிற்கு மாற்றப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டதால், 7-8 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மாற்றம் கொண்டுவந்திருக்கிறோம். குறைந்தது ஒரு பாடப் புத்தகம் 10 ஆண்டுகாலத்திற்கு இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதர்ஸே ஆலம் உயர்நிலைப் பள்ளியில் அரபு மொழி ஆசிரியர் பதவி

*53 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா சாலையில் உள்ள மதர்ஸே ஆலம் என்ற அரசினர் உயர்நிலைப்பள்ளியில் அரபு மொழி ஆசிரியர் பதவி எவ்வளவு நாட்களாகக் காலியாக உள்ளது?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இந்தக் கல்வி ஆண்டில் மார்ச் 11 ஆம் தேதி இப்பள்ளியில் பணியாற்றி வந்த முதல் நிலை அரபு மொழி ஆசிரியர் இயற்கை எய்தியதை யொட்டி அப்பதவி காலியாக இருந்து அக்டோபர் மாதத்தில் நிரப்பப்பட்டுள்ளது.

(இ) வேலை தேடித்தரும் அலுவலகத்தாரால் தகுதி வாய்ந்த அரபு மொழி ஆசிரியர் ஒருவரை உடனடியாக அனுப்ப இயலாத காரணத்தால் இப்பதவியை நிரப்புவதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் அத்தகுதியில் ஓரளவு குறைவான ஒருவரின் பெயர் அனுப்பப்பட்டு அக்டோபர் இறுதியில் தற்காலிகமாக இரண்டாம் நிலை அரபு மொழி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்த அரபு மொழி ஆசிரியர்கள் பதவி காலியாகும்பொழுது நிரப்பப் படுவதில்லை என்று தமிழகத்தில் ஒரு குறை இருக்கிறது. உதாரணமாக செங்கோட்டையில் 5 அரபு மொழி ஆசிரியர்கள்

1973 ஆகஸ்ட் 7]

ஸ்தானங்கள் காலியானதால், மூன்று ஸ்தானங்கள் இதுவரையில் நிரப்பப்படவில்லை என்ற குறை இருக்கிறதே, அதுகுறித்து அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுகுறித்து விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் அதன் நிலைமைகளை ஆராய்ந்து பதில் சொல்லலாம். எங்கே காலி இடங்கள் இருக்கின்றனவோ அங்கே தகுதி வாய்ந்தவர்களை நியமிக்க வேண்டும். வேலை தேடித் தரும் அலுவலகங்களில் அதற்குரிய பெயர்களை நாம் கேட்கிறோம். முதல் நிலை அரபு மொழி ஆசிரியர்கள் வேண்டும் என்று கேட்டோம். தகுதியுடையவர்கள் இல்லாததினால் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் அக்டோபர் மாதத்தில் கிடைத்தார்கள். அவர்களை நியமித்தோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பள்ளியைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அதுகுறித்து விவரங்கள் அளிக்கலாம்.

Committee on Siddha system of medicine

* 54 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any panel has been set up in this State to collect materials for the Siddha system; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம். தமிழ்நாட்டில் சித்த மருத்துவம்பற்றிய கிடைப்பதற்கரிய கையெழுத்துப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும், அச்சுப் பிரதிகளையும் சேகரிப்பதற்கென, அரசு ஒரு குழுவை ஜூலை 1972-ல் அமைத்துள்ளது.

(இ) இக் குழு கீழ்க்கண்ட அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது :—

(1) டாக்டர் சி. எஸ். உத்தமராயன்—தலைவர்.

(2) டாக்டர் பி. எம். வேணுகோபால், தனி அலுவலர், சித்த மருத்துவப் பாடப் புத்தகக் குழு—உறுப்பினர்—செயலாளர்.

(3) டாக்டர் ஏ. ஆனந்தகுமார்—உறுப்பினர்.

(4) டாக்டர் எம். சண்முகவேலு—உறுப்பினர்.